RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025







# மாலை தந்தி


MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

www.malaithanthi.in

மாலை நாளிதழ்








சிவகங்கை | மலர்-5 | இதழ்- 239 | செப்டம்பர் 03, 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5


# “மீஞ்சூரில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டம், ஆவடியில் அனைத்து வீடுகளுக்கும் 24 மணி நேரமும் குடிநீர்” - முதல்வர் விஜய்

சென்னை, செப்.3-

தமிழகத்தின் நகரங்களில் குடிநீர், பாதாளச் சாக்கடை, திடக்கழிவு மேலாண்மை, பசுமைப் பரப்பு மற்றும் சாலை வசதிகளை மேம்படுத்தும் நோக்கில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் பல்வேறு புதிய திட்டங்களை சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் பேசுகையில், “தமிழகத்தின் நகரங்களில் குடிநீர், பாதாளச் சாக்கடை, திடக்கழிவு மேலாண்மை, சாலைகள், பூங்காக்கள் மற்றும் பள்ளி வசதிகளை மேம்படுத்தும் வகையில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் பல்வேறு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. வேகமாக அதிகரித்து வரும் நகரமயமாக்கல் மற்றும் மக்கள் தொகைப் பெருக்கத்தால், நகரங்களில் குடிநீர், கழிவுநீர், திடக்கழிவு மேலாண்மை, போக்குவரத்து, பசுமை மற்றும் அடிப்படை உட்கட்டமைப்பு தொடர்பான தேவைகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன.

எதிர்காலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, நகரங்களை சுகாதாரமான, பாதுகாப்பான, பசுமையான மற்றும் மக்கள் வாழ்வதற்கு ஏற்ற நகரங்களாக மாற்றுவது இன்றைய அவசியமாகும். இதனை முன்னிட்டு, பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்துவது அரசின் முக்கியக் கடமையாகும்.

1. பாதுகாப்பான மற்றும் தடையற்ற குடிநீர் விநியோகத் திட்டங்கள்: மக்களுக்குத் தேவையான குடிநீரைத் தடையின்றி வழங்கும் வகையில் பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளன. வடசென்னை, ஆவடி, பொன்னேரி மற்றும் மீஞ்சூர் பகுதிகளின் குடிநீர்த் தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில், மீஞ்சூரில் நாளொன்றுக்கு 400 மில்லியன் லிட்டர் கடல்நீரைக் குடிநீராக்கும் திட்டம் (Desalination Plant) 4 ஆயிரத்து 800 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

ஆவடி மாநகராட்சியில் அனைத்து வீடுகளுக்கும் 24 மணி நேரமும் குடிநீர் வழங்கும் வகையில் 500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

மதுரை, கடலூர் மாநகராட்சிகள், 9 நகராட்சிகள் மற்றும் 20 பேரூராட்சிகளில் குடிநீர் வசதிகளை மேம்படுத்த ஆயிரம் கோடி ரூபாயும், பழமையான 33 கூட்டுக்குடிநீர்த் திட்டங்களைச் சீரமைக்க முதற்கட்டமாக 300 கோடி ரூபாயும் ஒதுக்கப்படும்.

சென்னை கீழ்ப்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் திறனை அதிகரிக்க 410 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்டம் செயல்படுத்தப்படும்.

2. நவீன பாதாளச் சாக்கடை மற்றும் கழிவுநீர் மேலாண்மை: மதுரை மாநகராட்சியில் 40 ஆண்டுகள் பழமையான பாதாளச் சாக்கடை அமைப்பைச் சீரமைக்க முதற்கட்டமாக 2 ஆயிரத்து 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பாண்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.




நாகர்கோவில் மாநகராட்சியில் விடுபட்ட மற்றும் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளிலும், குன்றத்தூர் மற்றும் நந்திவரம்கூடுவாஞ்சேரி நகராட்சிகளிலும் 960 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய பாதாளச் சாக்கடைத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

மேலும், சென்னை - பெரம்பூர், கொளத்தூர், வில்லிவாக்கம், எழும்பூர் உள்ளிட்ட பகுதிகளில் குடிநீர் மற்றும் கழிவுநீர் அமைப்புகளை மேம்படுத்த 236 கோடி ரூபாய் செலவிடப்படும்.

3. அறிவியல் பூர்வமான திடக்கழிவு மேலாண்மை மற்றும் மின் உற்பத்தி:

திருநெல்வேலி மாநகராட்சியில் 256 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 9 மெகாவாட் திறன் உற்பத்தி செய்யும் வகையிலும், சேலம் மாநகராட்சியில் 291 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10 மெகாவாட் திறன் உற்பத்தி செய்யும் வகையிலும் ’திடக்கழிவிலிருந்து எரிசக்தி உற்பத்தி செய்யும் திட்டங்கள்’ (Waste to Energy Projects) செயல்படுத்தப்படும். இத்திட்டங்கள் மொத்தம் 547 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும்.

4. மேம்படுத்தப்பட்ட நகர்ப்புர சாலைகள் மற்றும் போக்குவரத்துக் கட்டமைப்பு:

குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடைப் பணிகளுக்காகத் தோண்டப்பட்டு சேதமடைந்த சாலைகளைச் சீரமைக்கவும், புதிய சாலைகள் அமைக்கவும் சென்னை உட்பட அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளிலும் 1,850 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

‘வெற்றித் தமிழகம்’ தொலைநோக்குத் திட்டத்தின்படி, சென்னை மாநகராட்சியில் 45 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 35 கிலோ மீட்டர் நீளத்திற்கு மக்கள் பயன்பாட்டிற்கு ஏற்ற நவீன சாலைகள் மற்றும் நடைபாதைகள் (People Friendly Modern Streets), பள்ளிகளைச் சுற்றி 15 கிலோ மீட்டர் நீளத்திற்குக் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிசெய்யும் சாலை வசதிகள் (Safe Access to Schools) மற்றும் 105 சாலை சந்திப்புகளை மேம்படுத்தும் பணிகள் 110 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

பிற மாநகராட்சிகளிலும் இதேபோன்ற நவீன சாலைகள் மற்றும் நடைபாதைகள், பள்ளிகளைச் சுற்றியுள்ள பாதுகாப்பான சாலை வசதிகள் மற்றும் சாலை சந்திப்பு மேம்பாட்டுப் பணிகள் 165 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். இப்பணிகள் அனைத்தும் 275 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த நகர்ப்புர மேம்பாட்டுத் திட்டமாகச் செயல்படுத்தப்படும்.

5. நகர்ப்புர பசுமையாக்கல் மற்றும் பொழுதுபோக்குப் பூங்காக்கள்: சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும், நகரங்களில் பசுமைப் பரப்பை அதிகரிக்கவும், பொதுமக்களுக்கான பொழுதுபோக்கு வசதிகளை மேம்படுத்தவும் பல்வேறு பசுமைத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். மக்கள் இயக்கமாக ஒரு கோடி மரக்கன்றுகள் நடப்பட்டு பராமரிக்கப்படும்.

திருச்சி, திருப்பூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் பெரிய பூங்காக்கள் 130 கோடி ரூபாய் செலவிலும், மாநிலம் முழுவதும் 250 புதிய பூங்காக்கள் 175 கோடி ரூபாய் செலவிலும் என மொத்தம் 305 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

6. பள்ளிகளின் உள்கட்டமைப்பு மேம்பாடு: நகர்ப்புர உள்ளாட்சிகளின் பள்ளிகளில் தரமான கல்வி மற்றும் பாதுகாப்பான சூழலை வழங்கும் வகையில், புதிய வகுப்பறைகள் கட்டுதல் மற்றும் நவீன வசதிகளை ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு உள்கட்டமைப்புப் பணிகள் மொத்தம் 335 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

7. பாரம்பரிய நகரங்கள் மற்றும் சுற்றுலாத் தலங்களின் சீரமைப்பு: சிதம்பரம் நகராட்சியில் நடைபெறும் உலகப் புகழ்பெற்ற அருள்மிகு தில்லை நடராஜர் திருத்தேர் விழாவைச் சிறப்பாக நடத்தவும், பக்தர்கள் எவ்வித இடையூறுமின்றி தரிசனம் செய்யவும், கோயிலைச் சுற்றியுள்ள நான்கு ரத வீதிகளில் குடிநீர், பாதாளச் சாக்கடை, மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்பு கம்பிகளைத் தரைக்கு அடியில் கொண்டு சென்று வீதிகளை நவீன முறையில் சீரமைக்க 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

கடலூரில் புனித டேவிட் கோட்டை முதல் வெள்ளி கடற்கரை வரை 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாரம்பரிய நடைபாதை அமைக்கப்படும். கன்னியாகுமரி கடற்கரைப் பகுதியை அழகுபடுத்தி, சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளை மேம்படுத்த 50 கோடி ரூபாய் செலவிடப்படும்.

8. சமச்சீர் வளர்ச்சி மற்றும் அடிப்படை வசதிகள் மேம்பாடு: சென்னை மாநகராட்சியின் உட்கட்டமைப்பு வசதி குறைவாக உள்ள பகுதிகளில் சாலைகள், மழைநீர் வடிகால்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், திடக்கழிவு மேலாண்மை வசதிகள், விளையாட்டு மைதானங்கள் மற்றும் சமுதாய நலக்கூடங்கள் உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேம்படுத்த 100 கோடி ரூபாய் செலவிடப்படும்.

இவ்வாறு முதல்வர் விஜய் அறிவித்தார்.

## ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகன பதிவுச் சான்றிதழ் டிஜிட்டல் முறையில் அறிமுகம்: முதலமைச்சர் விஜய்

சென்னை, செப்.3-

ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகனப் பதிவுச் சான்றிதழ் ஆகியவை டிஜிட்டல் முறையில் வழங்கப்படும் என சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜய் அறிவித்துள்ளார். சோதனை நடைபெறும் நாளன்றே டிஜிட்டல் ஓட்டுநர் உரிமம் வழங்கப்படும். டிஜிட்டல் ஓட்டுநர் உரிமம் மற்றும் ஆர்.சி ஆவணங்களை வரும் 15-ஆம் தேதி முதல் இணையம் வழியாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## வணிக சிலிண்டர் விலை உயர்வு மக்கள் நலனுக்கு எதிரானது: இந்திய கம்யூ. கண்டனம்

சென்னை, செப்.3-

”வணிக பயன்பாட்டுக்கான கேஸ் விலை உயர்வு மக்கள் நலன்களுக்கு எதிரானது, கடும் கண்டனத்திற்குரியது. வணிக நிறுவனங்களின் பயன்பாட்டிற்கான சமையல் சிலிண்டர் எரிவாயு விலை உயர்வை உடனடியாக ஒன்றிய அரசு கைவிட வேண்டும்” என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், “ஈரான் மீது சர்வதேச சட்டங்களுக்கு எதிராக, ஐக்கியநாடுகள் சபையின் நெறிமுறைகளுக்கு எதிராக அமெரிக்கா, தாக்குதலை நடத்தி வருகிறது. இதனால் ஹார்முஸ் நீரிணையில் பதற்றமான நிலை நீடித்து வருகிறது. இதனால் ஹார்முஸ் நீரிணை வழியிலான கடல் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. இதனை காரணமாகப் பயன்படுத்திக் கொண்டு சமையல் எரிவாயு விலை இந்தியாவில் தொடர்ந்து உயர்த்தப்பட்டு வருகிறது.

கடந்த மார்ச் மாதத்தில் மட்டும் மூன்று முறை வணிக பயன்பாட்டிற்கான சமையல் எரிவாயு விலை உயர்த்தப்பட்டது. 1768 ரூபாய் 50 காசுக்கு விற்று வந்த வணிக சிலிண்டர், 2 ஆயிரத்து 246 ரூபாய் 50 காசாக உயர்த்தப்பட்டது. இதனால் பல உணவகங்கள், தொழிலகங்கள் மூடப்பட்டன. தேநீர், காபி போன்றவற்றின் விலை கடுமையாக உயர்ந்தது.

இந்த சமையல் எரிவாயு விலை உயர்வை கண்டித்து நாடு முழுவதும் போராட்டங்கள் நடத்தப்பட்டன. அதன் காரணமாக கடந்த மாதம் ரூ.192 விலை குறைக்கப்பட்டது. ஜூலை மாதம் ரூ.153 விலை குறைக்கப்பட்டது. ஆனால், தற்பொழுது மீண்டும் ஒரு சிலிண்டருக்கு 9 ரூபாய் 50 பைசா விலை உயர்தப்பட்டுள்ளது. இதுமக்கள் நலன்களுக்கு எதிரானது, கடும் கண்டனத்திற்குரியது.

எனவே, வணிக நிறுவனங்களின் பயன்பாட்டிற்கான சமையல் சிலிண்டர் எரிவாயு விலை உயர்வை உடனடியாக ஒன்றிய அரசு கைவிட வேண்டும். அதன் விலையை குறைக்க வேண்டுமென இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு ஒன்றிய அரசை வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறது.” என்று குறிப்பிட்டுள்ளார்.

## ‘பாம்பு கடி, நாகதோஷம், ஜலதோஷம்...’ - பேரவையில் திமுகவினர், அமைச்சர்கள் விவாதத்தால் சிரிப்பலை

சென்னை, செப்.3-

சட்டப்பேரவையில் பாம்பு கடி குறித்து விவாதம் நடைபெற்ற நிலையில், நாக தோஷம், ஜலதோஷம் என விவாதம் நீண்டதால், பேரவை சிரிப்பலையால் அதிர்ந்தது.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது, பண்ருட்டி தொகுதி அதிமுக எம்எல்ஏ க.மோகன், “பண்ருட்டி அரசு மருத்துவமனையில் பாம்பு கடிக்கு சிகிச்சை, உயிர் காக்கும் மருந்துகள் வழங்க அரசு முன்வருமா ? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு சுகாதாரத்துறை அமைச்சர் கே.ஜி.அருண்ராஜ் அளித்த பதில்: இம்மருத்துவமனை 1981-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. தற்போது 208 படுகை வசதியுடன் வட்ட மருத்துவமனையான செயல்பட்டு வருகிறது. பாம்பு விஷக்கடி முறிவு மருந்து, வெறிநாய் கடி நோய் மருந்து மற்றும் உயிர் காக்கும் மருந்துகள் போதுமான அளவில் உள்ளன. கடந்து 2025- 26ம் ஆண்டில் பண்ருட்டி மருத்துவமனையில் பாம்பு கடியால் பாதிக்கப்பட்ட 142 பேர் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஏப்ரல் முதல் ஜூலை வரை 39 பேர் அனுமதிக்கப்பட்டு விஷ முறிவு சிகிச்சை பெற்றுள்ளனர்.

திமுக எம்எல்ஏ எம்.ஆர். கே.பன்னீர்செல்வம்: தவெக அரசின் 100 நாட்களில் எவ்வளவு பேர் பாம்பு கடியால் பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது நகர்புறங்களிலும் மக்கள் பாம்பு கடியால் பாதிக்கப்படுகின்றனர். அண்மையில் பிளஸ் டு மாணவி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்த விஷ முறிவு சிகிச்சை நகர்ப்புறங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளதா? அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பாம்பு கடி சிகிச்சை வசதி உள்ளதா?



காலாவதியான மருந்துகள் குறித்து கண்காணிக்கிறதா?

அருண் ராஜ்: நடப்பாண்டில் 9,519 பேர் பாம்பு கடியால் பாதிக்கப்பட்டு, 9 பேர் மரணம் அடைந்துள்ளனர். கடந்த ஆண்டு 15,837 பேர் பாம்பு கடியால் பாதிக்கப்பட்டு, 26 மரணங்கள் ஏற்பட்டுள்ளன. 2024-ம் ஆண்டு 16,142 பேர் பாதிக்கப்பட்டு, 27 மரணங்கள் நிகழ்ந்துள்ளன. தமிழகத்தில் உள்ள அனைத்து நகர்ப்புற மருத்துவமனைகளிலும் பாம்பு கடி விஷ முறிவு சிகிச்சை மருந்துகள் உள்ளன. அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அளவிலேயே பாம்பு கடி சிகிச்சை மருந்துகள் உள்ளன.

திமுக எம்எல்ஏ கே.என்.நேரு: திருச்சி மாவட்டம், லால்குடி தொகுதி, காணக்கிளியநல்லூரில் 10 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்படும் ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தி முழு நேர ஆரம்ப சுகாதார நிலையமாக அமைத்துத்தரும்போது, அங்கு பாம்பு கடி சிகிச்சையும் கிடைக்கும்.

அருண்ராஜ்: பாம்பு கடி சிகிச்சைக்காக சில சமயம், சில மருத்துவமனைகளில் மருத்துவர் இல்லை எனும் போது, மற்ற இடங்களுக்கு செல்ல செல்லும் சூழல் இருக்கிறது. மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தமிழகத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், மாவட்ட மருத்துவமனைகள், தாலுகா மருத்துவமனைகள், மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகிய இடங்களில் 24 மணி நேரமும் மருத்துவர்கள் இருக்கின்றனர்.

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் மட்டும் இரவு நேரத்தில் மருத்துவர்கள் இல்லை. பாம்பு கடித்தவுடன் உடனடியாக சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் அந்த பொன்னான நேரத்தை வீணடிக்க கூடாது என்பதற்காக மக்களுக்கு எந்த மருத்துவமனையில் பாம்பு கடிக்கு சிகிச்சை கிடைக்கும், மாரடைப்புக்கு சிகிச்சை கிடைக்கும், அவசர சிகிச்சைக்கான மருந்துகள் இருக்கிறதா என்பதை அனைவருக்கும் வெளிப்படையாக மக்களுக்கு தெரிவிக்கும் விதமாக ‘நலம் செயலி’யில் வசதிகள் வெளிப்படையாக கொண்டுவரப்படும்.

முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம்: சட்டப்பேரவை கேள்வி நேரம் ஆரம்பித்த பிறகு, 29 நிமிடங்களாக பாம்புக்கடி குறித்து சுகாதாரத்துறை அமைச்சர் விரிவாக பதில் அளித்து வருகிறார். இதன் மூலம் பல்வேறு தொகுதிகளில் பாம்பு கடி இருப்பதாக அறிய முடிகிறது. அந்த தொகுதிகளில் எல்லாம் நாகதோஷம் இருப்பதாக நான் அறிகிறேன். அதை கழிக்க பிரார்த்தனை ஏதாவது இருந்தால் பேரவை தலைவர் நடத்திக் காட்ட வேண்டும். (என்றதும் பேரவையில் திடீர் சிரிப்பலை எழுந்தது)

அருண் ராஜ்: இந்த அரசு அறிவியல் பூர்வமான அரசு. தோஷம், பில்லி, சூனியம் போன்றவை மீது நம்பிக்கை இல்லை. உறுப்பினருக்கு நம்பிக்கை இருந்தால் உங்கள் தொகுதியில் தோஷ நிவர்த்தி மேற்கொள்ளலாம். மாநில அளவில் அறிவியல் பூர்வமான முயற்சி மட்டும்தான் எடுப்போம். ஜலதோஷம் தெரியும். பாம்பு கடிதோஷத்தை நான் கேள்விப்படவில்லை. தோஷத்தின் மீது நம்பிக்கையும் இல்லை, விருப்பமும் இல்லை.

அமைச்சர் ஆதவ் அர்ஜுனா: பெரியார் இயக்கத்தை பேசிய திமுக இன்று தோஷத்தை பேசிக்கொண்டிருக்கிறது. நாங்கள் பெரியார் வழி வந்தவர்கள், அறிவியல் பூர்வமாக இந்த பிரச்சினையை அணுக கூடியவர்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி: பேரவை திமுக துணைத் தலைவருக்கு ஜலதோஷம். அதைத்தான் முன்னாள் முதல்வர் கூறினார்.

பேரவைத் தலைவர் ஜேசிடி பிரபாகர்: கொஞ்சம் தள்ளி உட்காருங்கள். உங்களுக்கு தொற்றிக்கொள்ளக்கூடாது. இவ்வாறு சட்டப்பேரவையில் பாம்புக்கடி, நாகதோஷம், ஜலதோஷம் என விவாதம் நீண்டதால் பேரவை சிரிப்பலையில் அதிர்ந்தது.

## இம்மானுவேல் சேகரன் குருபூஜை

# சிவகங்கையில் அச்சக மற்றும் பிளக்ஸ் உரிமையாளர்களுடன் காவல்துறை ஆலோசனை கூட்டம்

சிவகங்கை செப்.03-

சிவகங்கையில் பிளக்ஸ் பேனர் மற்றும் பிரிண்டிங் அச்சக உரிமையாளர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா தலைமையில் நேற்று நடைபெற்றது. இதில் ஏராளமான அச்சக உரிமையாளர்களும் செய்தியாளர்களும் கலந்து கொண்டனர்.



இக்கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா பேசியதாவது: வரவிருக்கும் இம்மானுவேல் சேகரன் குருபூஜையை முன்னிட்டு, மாவட்டத்தில் அமைதியையும் சட்டம்-ஒழுங்கையும் பராமரிக்க அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். குறிப்பாக, அச்சு மற்றும் பிளக்ஸ் நிறுவனங்கள் வாள் போன்ற ஆயுதங்கள், அச்சுறுத்தும் வகையிலான வாசகங்கள் அல்லது மதம் மற்றும் இனம் சார்ந்த பதற்றத்தை உருவாக்கும் எந்த ஒரு விவரங்களையும் அச்சிடவோ, வெளியிடவோ கூடாது.

விதிமுறைகளை மீறி பொது அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் விளம்பரப் பலகைகள் தயாரித்தால் சட்டப்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவுறுத்தினார். மேலும், செய்தியாளர்களும் பொது அமைதி காக்கும் வகையில் பொறுப்புடன் செய்திகளை வெளியிட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.



■ திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.மனிஷ் நாரணவரே மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன் உள்ளார்.

## மாடம்பாக்கம் மதுரா நூத்துஞ்சேரி ஜோதி நகர் பகுதியில்

# ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் ஆலயத்தின் 27ஆம் ஆண்டு ஆடித்திருவிழா மற்றும் 17-ஆம் ஆண்டு தீமிதி திருவிழா

மாடம்பாக்கம் செப்.03-

செங்கல்பட்டு மாவட்டம் மாடம்பாக்கம் மதுரா நூத்தஞ்சேரி ஜோதி நகர் பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ தேவி கருமாரி அம்மன் ஆலயத்தின் 27-ஆம் ஆண்டு ஆடித்திருவிழா மற்றும் 17-ஆம் ஆண்டு தீமிதி திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது



இதையொட்டி 28.08.2026 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணியளவில் கணபதி ஹோமம், பந்தக்கால் திருக்காப்பு துவங்கி, அம்மனுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றது அதனை தொடர்ந்து 30.08.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு அம்மனுக்கு விசேஷ அபிஷேகம் மற்றும் தீபாராதனையும், பகல் 1.30 மணிக்கு அம்மனுக்கு பொங்கலிட்டு கூழ்வார்த்தலும் அதனை தொடர்ந்து அன்று மாலை 6.00 மணிக்கு தீமிதி திருவிழாவும், இரவு 9.00 மணிக்கு அம்மன் திருவீதி உலாவும் நடைபெற்றது.

மேலும் 31.08.2026 திங்கட்கிழமை இரவு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன மாதந்தோறும் பௌர்ணமி நாளில் அன்னதானம் வழங்கப்பட்டது

இவ்விழாவில் சிறப்பு அழைப்பாளராக அதிமுகவில் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எம்.தனபால், வழக்கறிஞர் எம்.கே.கோவிந்தன், அதிமுக மாடம்பாக்கம் பகுதி கழக செயலாளரும் 70வது வார்டு மாமன்ற உறுப்பினருமான எம்.தேவேந்திரன், எம்.தேவ பாலாஜி, திமுக பிரமுகர், ஆலய நிர்வாகிகள் தலைவர் வழக்கறிஞர் எம்.கே.கோவிந்தன், துணைத் தலைவர்கள் எம்.தேவேந்திரன், எஸ்.கண்ணன், செயலாளர் வி.மணி, பொருளாளர் ஜி.குணசேகரன், இணைச் செயலாளர் ஜே.ராஜா, துணை செயலாளர்கள் ஜே.முனுசாமி, கே.ஜி.கோவிந்தன், டி.ஆறுமுகம், கிராம பண்ணக்ககாரர் பி.குணசேகரன், ஊர் பிரிவு வசூல் பொறுப்பாளர்கள் எம்.ரவி, எம்.முருகன், கே.சூரியா, ஆர்.அஜித் மற்றும் முக்கிய நிர்வாகிகள், ஆலய விழாக்குழுவினர், விழா குழுவினர்கள், ஜோதி நகர் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# அனைத்து வீடுகள், கடைகள், கட்டிடங்களில் மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு ஏற்படுத்த வேண்டும்

## நகராட்சி ஆணையர் வேண்டுகோள்

கிருஷ்ணகிரி, செப்.03-

அனைத்து வீடுகள், கடைகள் மற்றும் கட்டிடங்களில் மழைநீர் சேமிப்பு கட்டமைப்பு ஏற்படுத்த வேண்டும் என கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையர் சேகர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: மழைநீர் சேமிப்பு என்பது நீர் ஆதாரங்களின் வளத்தை பெருக்குவதற்கு, நிலத்தடி நீர் உயர்வதற்கும் மழை நீர் சேமிப்பு அவசியம் என்பதால், கிருஷ்ணகிரி நகராட்சிக்குட்பட்ட பொதுமக்கள், அவர் அவர்களின் கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு இருக்குமானால், அதனை புனரமைக்கவும், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு இல்லாத கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும். எனவே, பொதுமக்கள் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு இன்றைய சூழலில் காலத்தின் கட்டாயம் என்பதை உணர்ந்து, நகராட்சியின் செயல்பாட்டிற்கு முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் நகராட்சி ஆணையர் சேகர் தெரிவித்துள்ளார்.



■ கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் அதியமான் பொறியில் கல்லூரி கூட்டரங்கில், ஓசூர் லைன்ஸ் கிளப், ஓசூர் அதியமான் பொறியியல் கல்லூரி மற்றும் ஓசூர் அரிமா சங்கம், குறிஞ்சி பன்னாட்டு அறக்கட்டளையுடன் இணைந்து 41-வது தேசிய கண்தான விழிப்புணர்வு விழா நிகழ்ச்சியில் கண்தானம் செய்த குடும்பத்தினருக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார், (01.09.2026) மரியாதை செய்தார்.



■ நீலகிரி மாவட்டம் கூடலூர் சட்டமன்றத் தொகுதியில் அண்மையில் புலி, யானை போன்ற வன விலங்கு தாக்குதலில் பரிதாமாக உயிரிழந்த 8 பேரின் இல்லங்களுக்கு கழக துணை பொதுசெயலாளரும்- நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினருமான ஆ.இராசா நேரில் சென்று உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியதோடு, மொத்தமாக ரூபாய் 6 இலட்சம் நிதியுதவி வழங்கினார்.



■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் (மஞ்சள் குடோன்) அமைந்துள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள மாவட்ட இருப்பு அறை மற்றும் கண்காணிப்பு அறையினை காலாண்டு தணிக்கைக்காக மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகளின் முன்னிலையில் (02.09.2026) அன்று திறக்கப்பட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்டஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) பாபு, தேர்தல் வட்டாட்சியர் திருமலை உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



■ தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்டத்தில் நடைபெற்றுவரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் திட்டங்கள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் / தமிழ்நாடு மின் உற்பத்திக் கழக மேலாண்மை இயக்குநர் ம.கோவிந்தராவ்,தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன். முன்னிலையில் நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜகுமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



# ஸ்ரீதேவி நாகசக்தி கருமாரியம்மன் ஆலயத்தில் தீமிதி திருவிழா

மாதவரம், செப்.3-

மாதவரம் தொகுதி செங்குன்றம் நாரவாரிகுப்பம் பேரூராட்சி திருவிக தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீதேவி நாகசக்தி கருமாரியம்மன் ஆலயத்தில் 17-ம் ஆண்டு ஆடிதிருவிழா மற்றும் 9-ம் ஆண்டு தீமிதி திருவிழா ஆலய நிர்வாகிகள் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. விழாவிற்கு நாரவாரிகுப்பம் பேரூராட்சி கவுன்சிலர் தெய்வானைகபிலன் தலைமை ஏற்று விழாவினை தொடங்கிவைத்தனர். நிகழ்ச்சியில் அம்மனுக்கு பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. பின்னர் காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்திகடனை பூர்த்தி செய்தனர். இத்திருவிழாவிற்கு ஆன்மீக சேவகர் சாம்கார்த்திக் உள்ளிட்ட சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் திருவிழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.

# நீலகிரி மாவட்டத்தில் செப்டம்பர் 5 மற்றும் 7-ம் தேதிகளில் தாயுமானவர் திட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

நீலகிரி. செப்.3-

இல்லம் சென்று பொது விநியோகத் திட்டப் பொருட்களை விநியோகிக்கும் தாயுமானவர் திட்டத்தின் கீழ் செப்டம்பர் 2026 மாதத்திற்கு 05.09.2026 மற்றும் 07.09.2026 ஆகிய தேதிகளில் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் இல்லம் சென்று பொது விநியோகத் திட்டப் பொருட்களை விநியோகிக்கும் தாயுமானவர் திட்டத்தின் மூலம் நீலகிரி மாவட்டத்தில் வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று பொது விநியோகத் திட்டப் பொருட்கள் செப்டம்பர் 2026 மாதத்திற்கு 05.09.2026 மற்றும் 07.09.2026 ஆகிய நாட்களில் வழங்கப்படும். இத்திட்டத்தினை முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தவறாமல் பயன்படுத்திக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.



# வடகரை ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் ஆடிதிருவிழா

மாதவரம், செப்.3-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் வடகரை கிராமத்தில் பக்தர்களுக்கு அருள்பாளித்து கொண்டு இருக்கும் அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் ஆடிதிருவிழா ஆன்மீக சேவகர் அருண்குமார் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி ஹோமத்துடன் அம்மனுக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. பின்னர் பதிவிளக்கு பூஜை, பூங்கரகம் எடுத்தல், கூழ்வார்த்தல், கும்பம் படையல்பூஜை போன்ற சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலாநடைபெற்றது. இத்திருவிழாவிற்கு ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள், இளைஞர்கள், மகளிர் குழுவினர்கள் மற்றும் சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு பொங்கல் வைத்து அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது.



## கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில்

# சென்னை விதை ஆய்வு துணை இயக்குனர் தலைமையில் அதிகாரிகள் ஆய்வு

## 6,881 கிலோ விதைகள் விற்பனை செய்ய தடை

கிருஷ்ணகிரி, செப்.03-

கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் சென்னை விதை ஆய்வு துணை இயக்குனர் தலைமையில் அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு, 6,881 கிலோ விதைகள் விற்பனை செய்ய தடை விதித்தனர்.

தரமான காற்கறி, பழப்பயிர் விதைகள் மற்றும் இதர பயிர் விதைகள் நியாயமான விலையில் கிடைப்பதை உறுதி செய்ய, மாநிலம் முழுவதும் சிறப்பு குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதன்படி, சென்னை விதை ஆய்வு துணை இயக்குனர் வானதி தலைமையில், கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி விதை ஆய்வாளர்கள் ஓசூர் சரவணன், அரூர் காவ்யா, சென்னை சதீஷ், சிலம்பரசன் ஆகியோர் கொண்ட சிறப்பு குழுவினர், கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் செயல்பட்டு வரும் வட்டார வேளாண் விரிவாக்க மையங்கள், தனியார் விதை விற்பனை நிலையங்கள் மற்றும் அரசு விதைப்பண்ணைகள் என 33 இடங்களில் கடந்த, 2 நாட்களாக ஆய்வு மேற்கொண்டனர்.

மேலும், சிறப்பு குழு ஆய்வு செய்த போது விற்பனைக்கு வைத்திருந்த விதை குவியல்களின் தரத்தை அறிய, கொள்முதல் ஆவணங்கள், பதிவேடுகள், தனியார் ரக விதைகளுக்கான பதிவுச்சான்றுகள், விதைப்பகுப்பாய்வு முடிவு அறிக்கைகள், இருப்பு பதிவேடு மற்றும் விற்பனை ரசீது ஆகியவை குறித்து ஆய்வு மேற்கொண்டனர். இதில், 13 விதை குவியல்களில், விதை விற்பனை அங்கீகாரம் பெறாமல், ஆவணங்கள் முறையாக பராமரிக்காமல், விதைச் சட்டம் 1966 விதிகளை மீறியது, தரமற்ற முறையில் இருந்த ரூ.19.60 லட்சம் மதிப்பிலான 6,881 கிலோ விதைகளை விற்பனை செய்ய தடை விதித்துள்ளனர். மேலும், 15 விதை மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, கிருஷ்ணகிரி மற்றும் தர்மபுரி ஆய்வகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# “எங்கள் ஆட்சியிலும் விவசாயிகள் மீதான 5,000+ வழக்குகள் ரத்து செய்யப்பட்டன” - உதயநிதி



சென்னை, செப்.03-
“கடந்த திமுக ஆட்சியின் போது, குடியுரிமை திருத்தச் சட்டம், வேளாண் சட்டங்கள், 8 வழிச் சாலை திட்டம், கூடங்குளம் அணுமின் நிலையம், மீத்தேன் ஹைட்ரோகார்பன் திட்டம் உள்ளிட்டவைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பதியப்பட்ட 5,000-க்கும் மேற்பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்பட்டன” என்று சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பேசும் போது, “விவசாயிகள் மீதான வழக்குகளை திரும்பப் பெறுவது வரலாற்றிலேயே இதுதான் முதல்முறை என்று ஒரு அமைச்சர் பேசியிருந்தார். அது சரியான தகவல் அல்ல.

எங்கள் ஆட்சியின் போது, குடியுரிமை திருத்தச் சட்டம், வேளாண் சட்டங்கள், 8 வழிச் சாலை திட்டம், கூடங்குளம் அணுமின் நிலையம், மீத்தேன் ஹைட்ரோகார்பன் திட்டம் உள்ளிட்டவைக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது பதியப்பட்ட 5,000-க்கும் மேற்பட்ட வழக்குகளை முன்னாள் முதல்வர் மு.க. ஸ்டாலின் வாபஸ் பெற்றார். அப்போது 110 விதியின் கீழ் இந்த வழக்குகள் ரத்து செய்யப்படவில்லை. அதிகாரிகளை அழைத்து வழக்குகளை வாபஸ் பெற உத்தரவிட்ட பிறகு, சட்டப்பேரவையில் தெரிவித்தார்” என்றார்.

முன்னதாக, விதி எண் 110-இன் கீழ் முதல்வர் விஜய் சட்டப்பேரவையில் வெளியிட்ட அறிவிப்பில், “கடந்த 2021 மே முதல் 2026 ஏப்ரல் வரை, தங்களது வாழ்வாதாரம், உரிமைகள் மற்றும் நியாயமான கோரிக்கைகளுக்காக அமைதியான முறையில் போராடிய விவசாயிகள் மற்றும் ஆசிரியர்கள் மீது பதிவு செய்யப்பட்ட அனைத்து வழக்குகளும் திரும்பப் பெறப்படும்.

ஜனநாயக உரிமைகளை மதிக்கும் நமது அரசு, கடந்த ஆட்சியாளர்களால் விவசாயிகள் மற்றும் ஆசிரியர்கள் தங்களது கோரிக்கைகளுக்காக அமைதியான முறையில் போராடிய போது அவர்கள் மீது பதிவு செய்யப்பட்ட வழக்குகளை மனிதநேய அடிப்படையிலும், ஜனநாயகக் கொள்கைகளின் அடிப்படையிலும் அனைத்து வழக்குகளையும் திரும்பப் பெற அரசு முடிவு செய்துள்ளது.

விவசாயிகள் மற்றும் ஆசிரியர்களும், அவர்களது நியாயமான கோரிக்கைகளுக்கும் இவ்வரசு உறுதுணையாக நிற்கும். திருவண்ணாமலை மாவட்டம், சிப்காட் தொழிற்பேட்டை எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்ட விவசாயிகள் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டதுடன், சில விவசாயிகள் மீது குண்டர் தடுப்புச் சட்டமும் போடப்பட்டது.

பரந்தூரில் புதிய விமான நிலையம் அமைக்கும் திட்டத்திற்கு எதிராக, விவசாயிகள் தொடர் போராட்டங்களில் ஈடுபட்டனர். விவசாய நிலங்கள், நீர்நிலைகள் மற்றும் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்ற நோக்கத்தோடு, விமான நிலையத் திட்டத்தை கைவிட வேண்டும் என்று போராடிய விவசாயிகள் மீதும் முந்தைய அரசால் மனித நேயமற்ற வகையில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளன.

மனிதநேய அடிப்படையிலும், ஜனநாயகக் கொள்கையின் அடிப்படையிலும் அனைத்து வழக்குகளையும் திரும்பப்பெற அரசு முடிவு செய்துள்ளது. இந்த நடவடிக்கை ஜனநாயக உரிமைகளை மேலும் வலுப்படுத்துவதோடு, சாமானிய மக்களுக்கும் அரசுக்கும் இடையிலான நம்பிக்கையை உறுதிப்படுத்தும்” எனத் தெரிவித்திருந்தது நினைவுகூரத்தக்கது.

# விஜய் தலைமையிலான ஆட்சி 23ம் புலிகேசி ஆட்சி போல உள்ளது: டிடிவி தினகரன் விமர்சனம்





சென்னை, செப்.03-
விஜய் தலைமையிலான ஆட்சி 23ம் புலிகேசி ஆட்சி போல உள்ளது என்று அம்மா மக்கள் முன்னேற்றக் கழக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் கடுமையாக விமர்சித்துள்ளார். தவெக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு தமிழ்மொழி சொல்லி கொடுத்தாலும் வராது அவர்களுக்கு அடிப்படை கணித அறிவே கிடையாது என்று அவர் கூறியுள்ளார்.
Geographic Reference
தவெக ஆட்சி 5 ஆண்டுகள் நீடிக்காது என்ற அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் கருத்துக்கு ஆதரவாக டிடிவி தினகரன் பேட்டி அளித்துள்ளார். வீழ்ச்சியில் இருந்து தமிழ்நாட்டை மீட்டெடுக்கும் கடமை எதிர்க்கட்சிகளுக்கு உள்ளது. தவெக ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்கான வேலைகளை அனுபவசாலிகள் செய்வார்கள். தமிழ்நாட்டின் நலன் கருதி தவெக ஆட்சியை முடிவுக்கு கொண்டு வருவோம் என்று அவர் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

தவெக ஆட்சியின் முதல் 100 நாள் ஆட்சி, சினிமா படம் பார்ப்பது போல் உள்ளது. 100 நாட்களாக முதலமைச்சர் விஜய் மவுன விரதம் இருக்கிறார் என விமர்சனம் செய்துள்ளார். எதார்த்தத்துக்கும் தவெக ஆட்சிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. தவெகவினரை விமர்சிப்பதே அசிங்கமாக உள்ளது; இதற்கு ஒரு முடிவு விரைவாக வரும். நிழலை பார்த்து வாக்களித்து பொதுமக்கள் ஏமாற்றமடைந்துள்ளனர். இன்ஸ்டாவால் ஆட்சிக்கு வந்தவர்கள், இன்ஸ்டாவால் வீழ்வார்கள் என்று அவர் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் நடுநிலையோடு செயல்படுவதுபோல அமைச்சர்களை தவறான கருத்தைப் பேச வைக்கிறார் என்று அவர் தெரிவித்துள்ளார். தமிழைக் கூட சரியாக வாசிக்க தெரியாதவர்களாக சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அமைச்சர்கள் இருக்கிறார்கள். அடிப்படை கணித அறிவு கூட இல்லாமல் பேசுவது வருத்தமளிக்கிறது என்று அவர் அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

# வாக்கு எண்ணிக்கைக்கு ‘டோட்டலைசர்’ கருவிகள் - மத்திய அரசு பரிசீலிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, செப்.03-
மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் பதிவான வாக்குகளை எண்ணுவதற்கு, ‘டோட்டலைசர்’ கருவிகளை பயன்படுத்துவது குறித்து பரிசீலிக்குமாறு மத்திய அரசுக்கு, உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



வாக்குப்பதிவின்போது குறிப்பிட்ட வாக்குச்சாவடியில் எந்தக் கட்சிக்கு எவ்வளவு வாக்குகள் கிடைத்தன என்பதை அறிந்து கொள்வதால், தேர்தலுக்குப் பிந்தைய வன்முறைகள் மற்றும் வாக்காளர்கள் அச்சுறுத்தலுக்கு ஆளாவதைத் தடுக்க வேண்டும். அதற்காக 14 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை ஒன்றாக இணைத்து, மொத்தமாக வாக்குகளை எண்ணும் ‘டோட்டலைசர்’ கருவிகளை அறிமுகப்படுத்த வேண்டும் எனக் கோரி யோகேஷ் குப்தா என்பவர் சார்பில், வழக்கறிஞர் அஸ்வினிகுமார் உபாத்யாய் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார்.

இந்த மனு தலைமை நீதிபதி சூர்யகாந்த் மற்றும் நீதிபதிகள் ஜாய்மால்யா பக்ஷி, வி.மோகனா ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் அஸ்வினிகுமார் உபாத்யாய் மற்றும் மூத்த வழக்கறிஞர் கோபால் சங்கர நாராயணன் ஆகியோர் வாதிடும் போது, “வாக்காளர்களின் தனி உரிமையைப் பாதுகாக்கவும், தேர்தலுக்குப் பிந்தைய வன்முறைகளைத் தடுக்கவும் வாக்கு எண்ணிக்கைக்காக உலகளவில் டோட்டலைசர் முறை பயன்படுத்தப்படுகிறது.

கடந்த 2018-ல் தேர்தல் ஆணையமே டோட்டலைசர்களை அறிமுகப்படுத்தும் காலம் வந்துவிட்டது என நீதிமன்றத்தில் கூறியிருந்தது. மேலும், தேர்தல் நடத்தை விதிகள் பிரிவு 169-ன் கீழ் மத்திய அரசு தேர்தல் ஆணையத்துடன் ஆலோசித்து விதிகளைத் திருத்த முடியும் என்பதால், நாடாளுமன்றத்தில் புதிய சட்டம் இயற்ற வேண்டிய அவசியமில்லை” எனத் தெரிவித்தனர்.

தேர்தல் ஆணையம் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் தாமா சேஷாத்ரி நாயுடு, “படிவம் 17-சி மூலம் வாக்கு எண்ணிக்கையின் போது முகவர்கள் சரிபார்க்கும் நடைமுறை, டோட்டலைசர் பயன்படுத்தினால் சாத்தியப்படாது. ஒப்புகைச் சீட்டு சரிபார்ப்பதிலும் சிக்கல்கள் ஏற்படும். இந்த விவகாரத்தில் தேர்தல் ஆணையம் பரிந்துரை மட்டுமே செய்ய முடியும், தேர்தல் நடத்தை விதிகளில் சட்டப்பூர்வ திருத்தம் கொண்டு வரும் அதிகாரம் மத்திய அரசிடமே உள்ளது” என கூறினார்.

இதையடுத்து நீதிபதிகள், “டோட்டலைசர் கருவியை முற்றிலுமாக நிராகரிக்காமல், அதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களையே தேர்தல் ஆணையம் சுட்டிக்காட்டியுள்ளது. எனவே, வாக்கு எண்ணிக்கைக்கு டோட்டலைசர் கருவிகளை அறிமுகப்படுத்துவது தொடர்பாகத் தேர்தல் நடத்தை விதிகளில் தேவையான திருத்தங்களை மேற்கொள்வது குறித்து மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும். இது தொடர்பாக, தேர்தல் ஆணையம் இது பரிந்துரையை மத்திய அரசுக்கு உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும். அதனை மத்திய அரசு பரிசீலிக்க வேண்டும்” என உத்தரவிட்டனர்.

# “விவசாய நில வகை மாற்ற மசோதாவை திரும்பப் பெறுக” - மு.வீரபாண்டியன்

சென்னை, செப்.03-
“விவசாய நிலத்தை வகை மாற்றம் செய்ய உள்ளாட்சி அமைப்புகளின் அனுமதி கட்டாயம் என்பதை நீக்குவதற்கான சட்ட திருத்த மசோதா வை கைவிட வேண்டும்,” என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழகத்தில் நகர்ப்புற மேம்பாட்டு திட்டங்களுக்கு விவசாய நிலங்களை பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது. இது கவலை அளிக்கிறது. இதனால் விவசாய நிலங்களின் பரப்பளவும், உணவுப் பொருட்களின் உற்பத்தியும் குறைவதோடு, உணவுப் பாதுகாப்பு அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் விவசாயிகளின் நலன்களும், வாழ்வாதாரமும் பாதிக்கப்படும். இந்த நிலையில் விவசாய நிலங்களை மேம்பாட்டு திட்டங்களுக்கு பயன்படுத்துவதற்காக, நில வகை மாற்றம் செய்வதற்கு இருந்து வந்த தடைகளை நீக்க தமிழக அரசு முயல்கிறது.

இது சரியல்ல. விவசாய நிலங்களை வகைப்பாடு மாற்றுவதற்கு 2017-ம் ஆண்டு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. அவற்றை தளர்வு செய்ய தற்பொழுது முயற்சிகள் நடைபெறுகின்றன. அதன் ஒரு பகுதியாக, தற்பொழுது நகர், ஊரமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள சட்டத்திருத்த மசோதா ஒன்றை தமிழக அரசு சட்டமன்றத்தில் அறிமுகம் செய்துள்ளது. அதில் நில மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்தும் போது நன்செய் வகைப்பாட்டு நிலங்களை பயன்படுத்த வேண்டிய தேவை எழுகிறது. இதற்கு உள்ளாட்சி அமைப்பு மற்றும் மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெறுவது கட்டாயம் என்பது நீக்கப்படுகிறது.

அதேபோல் உள்ளாட்சி களிடம் உள்ள அனுமதி வழங்கும் அதிகாரத்தை நகர் மற்றும் ஊரக அமைப்பு இயக்குநருக்கு மாற்ற இந்த மசோதா வகை செய்கிறது. இது உள்ளாட்சிகளின் அதிகாரத்தை பறிக்கும் செயலாகும். எனவே, இம்மசோதாவை உடனடியாக திரும்ப பெற வேண்டும்.” இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# தமிழகத்தில் புதிதாக 7 செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்படும்: அமைச்சர் அருண்ராஜ்



சென்னை, செப்.03-
தமிழகத்தில் புதிதாக 7 செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்படும். நெல்லை, திருச்சி, தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல்லில் தலா 100 இடங்களும், கோவையில் 60 இடங்கள் கொண்ட கல்லூரியும் அமைக்கப்படும் என சுகாதாரத் துறை அமைச்சர் அருண்ராஜ் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இது குறித்து அவர் கூறுகையில், “தமிழகத்தில் திருநெல்வேலி, திருச்சி, தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை, நாமக்கல் ஆகிய ஆறு மாவட்டங்களில் தலா 100 பி.எஸ்.சி நர்சிங் இடங்களுடன் புதிய செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்படும். கோவை இஎஸ்ஐ மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மாநில அரசு நிதியில் 60 பிஎஸ்சி நர்சிங் இடங்களுடன் புதிய செவிலியர் கல்லூரி தொடங்கப்படும்.

அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள் காலி பணியிடங்கள் இருக்கக்கூடாது என்பது தான் தவெக அரசின் நோக்கம். அனைத்து மருத்துவமனைகளிலும் மருத்துவ காலி பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். கட்டுமான பணிகள் நிறைவுற்ற மருத்துவமனைகள் விரைவில் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்,” என்றார்.

பின்னர், ரிஷிவந்தியத்தில் தாலுகா மருத்துவமனை அமைக்கப்படுமா? என்ற உறுப்பினர் கேள்விக்கு, “தேவை இருப்பின் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்” என அமைச்சர் அருண்ராஜ் தெரிவித்தார்.

மேலும், வள்ளியூர் மருத்துவமனையை தரம் உயர்த்த வேண்டும் என்ற மற்றொரு உறுப்பினரின் கேள்விக்கு, “தேவை இருப்பின் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்,” என்றார். பின்னர், பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு ஃப்ரீஸர் பாக்ஸ் மற்றும் சி.டி.ஸ்கேன் வசதி ஏற்படுத்த வேண்டும் என எம்எல்ஏ மோகன் கோரிக்கை விடுத்தார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் அருண்ராஜ், பண்ருட்டி அரசு மருத்துவமனைக்கு 2 ஃப்ரீஸர் பாக்ஸ்கள் வழங்கப்படும். மேலும், தேவையிருப்பின் சி.டி. ஸ்கேன் வசதியும் ஏற்படுத்தித் தரப்படும். பண்ருட்டி அரசு மருத்துவமனையை கடலூர் அரசு மருத்துவமனைக்கு நிகரான தரம் உயர்த்துவது தொடர்பாக ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

பின்னர், திமுக எம்எல்ஏ ஓபிஎஸ் பேசுகையில், “பாம்புக்கடி பிரச்சினைகள் பற்றி 29 நிமிடங்கள் அமைச்சர் அருண்ராஜ் பதில் சொன்னார்; பாம்புக்கடி பிரச்சினைகள் உள்ள பகுதிகளில் நாக தோஷம் இருப்பதாக புரிந்துகொள்கி றேன். நாக தோஷம் விலகுவதற்கு பிரார்த்தனைகள் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்” எனத் தெரிவித்தார்.

பின்னர் பேசிய, அமைச்சர் அருண்ராஜ், “எங்கள் அரசு அறிவியல்பூர்வமாக இயங்கக்கூடிய அரசு; தோஷம், பில்லி சூனியத்தில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை; ஜலதோஷம் தான் அதிகம் உள்ளது. பாம்புக்கடி தோஷம் இல்லை” என்று கூறினார்.

# அதிமுக ஆட்சியின்போது மதுரை மத்திய சிறையில் ரூ. 100 கோடி ஊழல் 4 மாதங்களில் விசாரணையை முடிக்க சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு



சென்னை, செப்.03-
அதிமுக ஆட்சியின்போது மதுரை மத்திய சிறைச்சாலையில் நடைபெற்ற 100 கோடி ரூபாய் ஊழல் வழக்கை விரைந்து விசாரித்து முடித்து 4 மாதத்திற்குள் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று உத்தரவிட்டுள்ள சென்னை உயர்நீதிமன்றம், தவறினால் விசாரணையை வேறு அமைப்புக்கு மாற்று நேரிடும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கறிஞரும், சிறைக்கைதிகள் உரிமைகள் மைய இயக்குநருமான பி. புகழேந்தி தாக்கல் செய்திருந்த பொது நல மனுவில், மதுரை மத்திய சிறையில் கைதிகளால் தபால் அனுப்புவதற்கான கவர்கள், அட்டைகள் போன்ற ஸ்டேஷனரிப் பொருள்கள், மருத்துவ உதவிப்பொருள்கள் தயாரிக்கப்பட்டு அவை பல்வேறு அரசு அலுவலகங்கள், மருத்துவமனைகள், நீதிமன்றங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவது போலவும், கைதிகளுக்கு சம்பளம் கொடுத்தது போலவும் போலியாக கணக்கு தயாரிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார்.

இதன் மூலம் கடந்த 2016 முதல் 2021 வரையிலான காலகட்டத்தில் சுமார் 100 ரூபாய் கோடி வரை ஊழல் நடந்திருப்பது தகவல் அறியும் உரிமைச்சட்டம் மூலமாக தெரியவந்துள்ளதாகவும் எனவே லஞ்ச ஒழிப்புத் துறை போலீசார் விரிவான விசாரணை மேற்கொள்ள உத்தரவிட வேண்டும் என கேட்டுக் கொண்டிருந்தார். இந்த வழக்கை ஏற்கனவே விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டிருந்தது. அதே வேளையில் புகாரில் முகாந்திரம் இருந்தால் லஞ்ச ஒழிப்பு துறை வழக்கை விசாரிக்க உத்தரவிட்டிருந்தது.

இந்த நிலையில் சென்னை உயர்நீதிமன்றத்தில் சிறைவாசியின் மனைவியான கோகிலா என்பவர் தாக்கல் செய்திருந்த வழக்கில் தனது கணவர் சிறைச்சாலையில் உள்ள பள்ளியில் உதவியாளராக பணிபுரிந்து வந்ததாகவும் ஆனால் அவருக்கு உரிய சம்பளமோ நன்னடத்தை மதிப்பெண்ணோ வழங்கப்படவில்லை என வழங்கு தொடர்ந்திருந்தார். இந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் புகழேந்தி, சிறை வாசிகளுக்கு சம்பளம் வழங்கியது போன்று போலிக்கணக்குகளை உருவாக்கி 100 கோடி ரூபாய் வரை ஊழல் நடைபெற்று வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்று வருவதாக சுட்டிக்காட்டினார். விசாரணை மிக மந்தமாக நடைபெற்று வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அப்போது குறுக்கிட்ட காவல்துறை தரப்பு வழக்கறிஞர், விரிவான விசாரணையை முடிப்பதற்கு மேலும் கால அவகாசம் தேவை எனவும், விரைந்து விசாரித்து முடித்து சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்ய சிறப்பு விசாரணை குழுவை அமைக்க உள்ளதாகவும் தெரிவித்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதிகள், மூத்த ஐபிஎஸ் அதிகாரி தலைமையில் சிறப்பு குழுவை அமைத்து சம்பந்தப்பட்ட நீதிமன்றத்தில் நான்கு மாதத்திற்குள் இறுதி அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றும், லஞ்ச ஒழிப்புத்துறை அறிக்கை தாக்கல் செய்ய தவறினால் விசாரணையை வேறு அமைப்புக்கு மாற்ற நேரிடும் என்று எச்சரித்துள்ளனர். மேலும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கைகளும் எடுக்க உத்தரவிடப்படும் எனும் தெரிவித்தனர்.

# நேபாள வெள்ளம்: மீட்பு பணி குறித்த விரிவான அறிக்கை தாக்கல் செய்ய ஒன்றிய, மாநில அரசுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவு

சென்னை, செப்.03-
நேபாள வெள்ளத்தில் சிக்கி காணாமல் போனவர்களை மீட்க எடுத்த நடவடிக்கை குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்று ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கும்பகோணத்தை சேர்ந்த சூப்பர் யாத்ரா டிராவல்ஸ் என்ற தனியார் பயண நிறுவனம் மூலம் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியை சேர்ந்த 57 பேர் கடந்த ஆகஸ்ட் 23ம் தேதி கும்பகோணத்திலிருந்து நேபாளத்திற்கு சென்றனர். இந்நிலையில் ஆகஸ்ட் 26ம் தேதி நேபாளத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் அவர்கள் சிக்கினார்.

வெள்ளத்தில் சிக்கியவர்களில் ஓய்வு பெற நீதிபதி சிவஞானம் உள்ளிட்டோரை பற்றி தற்போது வரை எந்த தகவலும் கிடைக்கவில்லை. நேபாளம் சென்ற தமிழகத்தை சேர்ந்த 57 பேரின் நிலவரம் குறித்த அவர்களது குடும்பத்தினருக்கு தெரிவிக்க வேண்டும் எனவும் உடனடியாக மீட்பு நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள உத்தரவிட வேண்டும் என கூறி திண்டுக்கல்லை சேர்ந்த சர்வேஷ் என்பவர் உயர்நீதிமன்ற மதுரை கிளையில் பொதுநல மனுவை தாக்கல் செய்திருந்தார் அந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

இந்நிலையில், உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி தர்மாதிகாரி மற்றும் நீதிபதி அருணமுருகன் ஆகியோர் அமர்வில் இன்று இந்த மனு விசாரணைக்கு வந்தது. அப்பொழுது தமிழக அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் விஜயநாராயணன், தமிழகத்தில் இருந்து கைலாச யாத்திரை சென்ற 305 பேரில் 220 மீட்கப்பட்டு சொந்த ஊர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் மீதமுள்ள 85 பேரை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், இதில் உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி சிவஞானம் உள்பட காணாமல் போனவர்களின் குடும்பத்தினர், அரசு செலவில் காத்மாண்டு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவித்தார்.

இதனையடுத்து நேபாள வெள்ளத்தில் சிக்கி காணாமல் போனவர்களை மீட்க எடுத்த நடவடிக்கை குறித்து விரிவான அறிக்கை தாக்கல் செய்யும்படி ஒன்றிய மற்றும் மாநில அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. மேலும், வழக்கினுடைய விசாரணையை அடுத்த வாரம் ஒத்திவைத்து உத்தரவிட்டுள்ளனர்.



# மதுரையில் ஆந்திரா மாநில துணைமுதல்வர் பவன் கல்யாண் பிறந்தநாள் விழா

மதுரை, செப்.3-

ஜனசேனா கட்சியின் நிறுவன தலைவரும் ஆந்திர மாநிலத்தின் துணை முதல்வருமான பவன் கல்யாண் 55வது பிறந்தநாளை முன்னிட்டு மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில் மதுரை மாவட்ட பொறுப்பாளர் ராம்குமார் தலைமையில் மாபெரும் ரத்ததான முகாம் நடைபெற்றது. ஜனசேனா கட்சி இளைஞர் அணி நிர்வாகிகள் ராம்குமார், மணி ,ஸ்டீபன் காளிதாஸ், சுந்தர் மற்றும் பல்வேறு இளைஞர்கள் ரத்ததானம் அளித்தனர். முகாமில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் மாவட்ட பொறுப்பாளர் ராம்குமார் பேசியதாவது ஜனசேனக் கட்சிக்கு தமிழகத்திலும் பல்வேறு நிர்வாகிகள் தேர்வு நடைபெற்று வருகின்றது தமிழன் மக்களின் நலனுக்காக தொடர்ந்து குரல் எழுப்பி மாற்றத்திற்கான வாய்ப்பை உருவாக்க ஜனசேனா கட்சியின் நிறுவனத் தலைவர் பவன் கல்யாண் பிறந்த நாளில் உறுதியேற்றுள்ளோம். மேலும் இந்த ரத்ததான முகாமை சிறப்பாக நடத்திட அனுமதி அளித்தஅரசு ராஜாஜி மருத்துவமனை முதல்வருக்கும், ரத்த வங்கி துறை தலைவருக்கும் தனது நன்றியை தெரிவித்துக் கொண்டார். அதனைத் தொடர்ந்து மதுரை கூடலழகர் பெருமாள் கோவிலில் பவன் கல்யாண் பூர்ண நலமுடன் வாழ சிறப்பு பூஜைகள் செய்யப்பட்டு பக்தர்களுக்கு இனிப்புகளும் வழங்கப்பட்டது.



■ மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் அலுவலக செயல்பாடுகள் மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, ஆய்வு மேற்கொண்டார்.மேலும் அலுவலகத்தில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் வருவாய் தொடர்பான சேவைகள், மனுக்கள் மீதான நடவடிக்கைகள், பட்டா மாற்றம், முதியோர் உதவித்தொகை, சமூக பாதுகாப்புத் திட்டங்கள், வருமானம், இருப்பிடம், சாதிச் சான்றிதழ்கள் உள்ளிட்ட பல்வேறு சான்றிதழ்கள் வழங்கும் பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தார்.




# மதுரையில் பீமா ஜுவெல்லரியின் 2-வது ஷோரூம் திறப்பு: குவிந்த மக்கள் கூட்டம்

மதுரை, செப்.3-

மதுரை அண்ணா நகரில் பீமா ஜுவெல்லரியின் 2-வது ஷோரூம் பிரமாண்டமாக திறக்கப்பட்டது. திரைப்பட நடிகை பிரீதி முகுந்தன் ஷோரூமை குத்து விளக்கு திறந்து வைத்தார். திறப்பு விழாவையொட்டி காலை முதலே பொதுமக்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் திரண்டனர்.

1925-ம் ஆண்டு தொடங்கப்பட்ட பீமா ஜுவெல்லரி, 101 ஆண்டுகால நம்பிக்கையுடன் மதுரையில் தனது சேவையை விரிவுபடுத்தியுள்ளது. அண்ணா நகர் ஷோரூமில் தங்கம், வைரம், பிளாட்டினம், வெள்ளி உள்ளிட்ட பல்வேறு வகையான நகைகள் விற்பனைக்கு உள்ளன. வாகன நிறுத்துமிட வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.திறப்பு விழா சிறப்பு சலுகையாக தங்க நகைகளுக்கான VA-வில் 60% வரை தள்ளுபடி, ஒவ்வொரு ரூ.1 லட்சம் கொள்முதலுக்கும் இலவச தங்க நாணயம், வைர நகைகளுக்கு ஒரு காரட்டுக்கு ரூ.25 ஆயிரம் வரை தள்ளுபடி உள்ளிட்ட பல்வேறு சலுகைகள்அறிவிக்கப்பட்டுள்ளன.மேலும்விரைவில் தஞ்சாவூர் மற்றும் காரைக்குடியிலும் ஷோரூம்களை திறக்க உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



■ தேனி மாவட்ட காவல்துறையில் சிறப்பாக பணியாற்றி பணி நிறைவு பெற்ற காவல்துறையினருக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K.S.பிரவீன் கௌதம், வாழ்த்துகளை தெரிவித்தார். இந்நிகழ்வில், நீண்ட காலமாக காவல்துறையில் நேர்மை, ஒழுக்கம் மற்றும் அர்ப்பணிப்புடன் பணியாற்றி ஓய்வு பெறும் காவல்துறையினரின் சேவையை பாராட்டி, அவர்களுக்கு பாராட்டு சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது. மேலும், ஓய்வு பெறும் காவல்துறையினரின் எதிர்கால வாழ்க்கை சிறப்பாக அமைய வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டதுடன், அவர்கள் காவல்துறைக்கு வழங்கிய அர்ப்பணிப்பான சேவை நினைவுகூரப்பட்டது. இந்நிகழ்ச்சியில் காவல் அதிகாரிகள் மற்றும் ஓய்வு பெறும் காவல்துறையினரின் குடும்பத்தினர்கள் கலந்து கொண்டனர்.

# அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பீனிக்ஸ் மலர் செய்தி வெளியீட்டு விழா : ஆசிரியர் வீ. சித்ரா குமரேசன் வெளியிட்டார்




சென்னை, செப்.3-

சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் பீனிக்ஸ் மலர் செய்தி வெளியீட்டு விழா செப்டம்பர் 1-ஆம் தேதி நடைபெற்றது. பீனிக்ஸ் மலர் ஆசிரியர் வீ. சித்ரா குமரேசன் தலைமையில் நடைபெற்ற விழாவில், அவர் மலர் செய்தியை வெளியிட்டார்.

விழாவில் சிறப்பு விருந்தினர்களாக மூத்த பத்திரிகையாளர் வி.எஸ். ராமன், தென்னிலை கதிர் ஆசிரியர் வி.எம். தமிழன் வடிவேல், ஆல் இந்தியா பிரஸ் மீடியா அசோசியேஷன் ஆசிரியர் வேல்முருகன், நாகூர் தர்கா தலைவர் மற்றும் நாகூர் ஆண்டவரின் பதினோராம் தலைமுறை ஆதீனம் கலீபா, இளைய கட்டபொம்மன் துளசிராமன், குரல் எஜுகேஷன் அறக்கட்டளையின் எம். தாமோதரன், நந்தகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.

மேலும் அரசியல் பிரமுகர் திருப்பதி, சமூக ஆர்வலர் ராஜசேகர், தென்னிலை கதிர் நிர்வாக ஆசிரியர் சிவகிருஷ்ணன், விஜிலென்ஸ் சிறப்பு ஆசிரியர் சதீஷ்பாபு, முருகன், சமூக ஆர்வலர்கள் அனுசியா, பிரபு, சாந்தகுமாரி உள்ளிட்டோர் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர்.

பீனிக்ஸ் மலர் செய்தியின் தேசிய, மாநில மற்றும் மாவட்ட செய்தியாளர்கள் திரளாக பங்கேற்றனர்.

# மானாமதுரையில் ஏழை மூதாட்டியின் ₹41,275 மதிப்பிலான கருவாடு திருட்டு: நகராட்சி ஊழியர்கள் மீது ஆணையரிடம் எழுத்துப்பூர்வ புகார்

மானாமதுரை செப்.03-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை புதிய பேருந்து நிலையம் அருகே பல ஆண்டுகளாகக் கருவாடு வியாபாரம் செய்து வந்த ஏழை மூதாட்டியின் வாழ்வாதாரப் பொருட்களை நகராட்சி ஊழியர்கள் அள்ளிச் சென்று முறைகேடு செய்துள்ள சம்பவம் அப்பகுதியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.




நடந்தது என்ன?

மானாமதுரை கிருஷ்ணராஜபுரம் காலனியைச் சேர்ந்த அய்யாத்துரை என்பவரின் மனைவி A. ராஜலெட்சுமி என்பவர், புதிய பேருந்து நிலையம் அருகே கூடை வைத்து கருவாடு வியாபாரம் செய்து வந்துள்ளார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு, விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த:

* 1 நடைவண்டி கருவாடு கூடை
* 2 சாக்கு மூட்டைகள்
* 1 கட்டப்பை

உள்ளிட்ட ₹41,275 மதிப்பிலான விலையுயர்ந்த கருவாடுகளை, நகராட்சி ஊழியர்கள் திடீரெனப் பறிமுதல் செய்து எடுத்துச் சென்றுள்ளனர்.

வாகனத்தில் ஏற்றிச் சென்று பங்கு போட்ட ஊழியர்கள்:

பறிமுதல் செய்யப்பட்ட கருவாடுகளை மாங்குளம் குப்பைக் கிடங்கிற்கு கொண்டு செல்வதாகக் கூறி TN-63-1654 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர். ஆனால், நகராட்சி ஊழியர்களான கருப்பு, சேகர், சோலையம்மா, குமரன் ஆகியோர் வழியிலேயே விலையுயர்ந்த கருவாடுகளைத் தங்களுக்குள் எடுத்துக் கொண்டு (திருடிச் சென்று), கழிவுகளை மட்டுமே குப்பைக் கிடங்கில் கொட்டியதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஆணையரிடம் கண்ணீர் மல்க மனு:

தனது வாழ்வாதாரமான ₹41,275 மதிப்பிலான கருவாடுகள் சூறையாடப்பட்டதால் செய்வதறியாது தவித்த மூதாட்டி ராஜலெட்சுமி, மானாமதுரை நகராட்சி ஆணையரை நேரில் சந்தித்துப் புகார் மனு அளித்துள்ளார்.

அந்த மனுவில், சம்பந்தப்பட்ட நகராட்சி ஊழியர்களை நேரில் அழைத்து விசாரித்து, தனக்குச் சேர வேண்டிய பொருளுக்கான தொகை ₹41,275-ஐ முழுமையாகப் பெற்றுத் தருமாறும், தவறிழைத்த ஊழியர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கண்ணீருடன் முறையிட்டுள்ளார்.

அடிப்படை வாழ்வாதாரத்திற்காக உழைக்கும் ஏழை மூதாட்டியின் பொருட்களை அபகரித்த நகராட்சி ஊழியர்கள் மீது மாவட்ட நிர்வாகமும் காவல்துறையும் கடுமையான குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# சொர்க்கம் என்பது நமக்கு பசுமையான ஊரு தான்: கோவில் பாப்பாகுடி ஊராட்சி செயலாளர் ராஜேஷ் சாதனை

மதுரை செப்.3-

கிராமப்புறங்களில் பசுமைப் பரப்பை அதிகரிப்பதோடு, எதிர்கால தலைமுறைக்கு ஆரோக்கியமான சுற்றுச்சூழலை உருவாக்கும் வகையில் மரக்கன்றுகளை வளர்த்து பராமரிப்பதில் ஊராட்சிகளின் பங்கு முக்கியமானதாக இருந்து வருகிறது. அந்த வகையில், கோவில் பாப்பாகுடி கிராம ஊராட்சியில் சுமார் 14 ஆயிரம் மரக்கன்றுகளுடன் புதிய பசுமைப் போர்வையை உருவாக்கும் முயற்சியில் ஊராட்சி செயலாளர் ராஜேஷ் ஈடுபட்டு வருவது பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்களிடையே பாராட்டை பெற்றுள்ளது. பொதுவாக மரக்கன்றுகள் தேவைப்படும் போது வெளிப்புற நர்சரிகளை நாடும் நிலை பல கிராம ஊராட்சிகளில் காணப்படுகிறது. இதனால் மரக்கன்றுகளுக்கான செலவு அதிகரிப்பதுடன், தேவையான எண்ணிக்கையில் கன்றுகளை சரியான நேரத்தில் பெறுவதிலும் சிரமம் ஏற்படுகிறது. இந்த நிலையை மாற்றும் நோக்கில், கோவில் பாப்பாகுடி ஊராட்சியில் உள்ள வளங்களை பயன்படுத்தி, ஊரக வளர்ச்சித் துறை திட்ட இயக்குனர் சதீஷ் பாபு ஊராட்சிகளின் உதவி இயக்குனர் விசாலாட்சி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஆகியோரது மேன்மையான ஆலோசனையின் பேரில் மரக்கன்றுகள் வளர்க்கும் நர்சரி அமைக்கும் பணியை ஊராட்சி செயலாளர் ராஜேஷ் முன்னெடுத்துள்ளார். அவரது தொடர் கண்காணிப்பு மற்றும் பராமரிப்பு காரணமாக தற்போது இந்த நர்சரியில் சொர்க்கம், தான்றி, ஆவி, நாவல், மகாகனி, போன்ற 14,000-க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் வளர்க்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.இந்த நர்சரியின் மற்றொரு சிறப்பு அம்சமாக ஒன்பது வகையான மரக்கன்றுகள் ஒரே இடத்தில் வளர்க்கப்பட்டு வருகின்றன.



இதன் மூலம் ஊராட்சியின் தேவைக்கு மட்டுமின்றி, எதிர்காலத்தில் சுற்றுவட்டாரப் பகுதிகளுக்கும் தேவையான மரக்கன்றுகளை வழங்குவதற்கான வாய்ப்பும் உருவாகியுள்ளது.

ஒரு ஊராட்சியின் செயல்பாடு என்பது சாலை, குடிநீர், தெருவிளக்கு, தூய்மை போன்ற அடிப்படைப் பணிகளுடன் முடிவடைவதில்லை. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பசுமை வளர்ப்பும் உள்ளாட்சி நிர்வாகத்தின் முக்கிய பொறுப்பாகும்.

இந்த எண்ணத்தை செயல்பாட்டில் கொண்டு வந்திருப்பதே ஊராட்சி செயலாளர் ராஜேஷின் முயற்சியின் சிறப்பாக பார்க்கப்படுகிறது.

மரக்கன்றுகளை நடவு செய்வது மட்டுமல்லாமல், அவற்றை முறையாக வளர்த்து, தேவையான காலத்தில் பொதுமக்கள் மற்றும் பல்வேறு அரசு நிறுவனங்களுக்கு வழங்கும் வகையில் நர்சரியை உருவாக்கியிருப்பது பாராட்டுக்குரிய முயற்சியாகும்.

தமிழகத்தின் கிராம ஊராட்சிகளில் அரசு சார்பிலும், உள்ளாட்சி அமைப்புகளின் முயற்சியிலும் மர க்கன்றுகள் வளர்ப்பு மற்றும் நர்சரி அமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆயிரக்கணக்கான மரக்கன்றுகளை நடவு செய்வது சாதனை என்றாலும், அவற்றை தொடர்ந்து பராமரித்து வளர்ப்பதே மிகப்பெரிய சவாலாகும்.

இந்த வகையில், கோவில் பாப்பாகுடி ஊராட்சியில் உருவாக்கப்பட்டுள்ள 14 ஆயிரம் மரக்கன்றுகளைக் கொண்ட நர்சரி, மரக்கன்றுகளை உருவாக்குவதோடு நின்றுவிடாமல், அவற்றை எதிர்கால பசுமைப் பணிகளுக்கான வளமாக மாற்றும் முயற்சியாக பார்க்கப்படுகிறது. தனிப்பட்ட ஆர்வமும், நிர்வாகத்தின் ஒத்துழைப்பும் இணைந்தால் கிராமப்புறங்களில் எத்தகைய மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதற்கு கோவில் பாப்பாகுடி ஊராட்சியின் முயற்சி ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

ஒவ்வொரு ஊராட்சியிலும் இதுபோன்ற சிறிய அளவிலான நர்சரிகள் உருவாக்கப்பட்டு, ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டால், அடுத்த சில ஆண்டுகளில் கிராமப்புறங்களின் பசுமைப் பரப்பை கணிசமாக அதிகரிக்க முடியும்.அந்த வகையில், கோவில் பாப்பாகுடி ஊராட்சியில் இன்று வளர்ந்து வரும் 14 ஆயிரம் மரக்கன்றுகள், நாளைய பசுமையான கிராமத்திற்கான விதைகளாகும்."ஒரு ஊராட்சி ஒரு நர்சரி ஆயிரக்கணக்கான மரக்கன்றுகள்" என்ற எண்ணம் தமிழகத்தின் அனைத்து கிராம ஊராட்சிகளிலும் நடைமுறைக்கு வந்தால், மாநிலத்தின் பசுமைப் பரப்பை அதிகரிப்பதில் உள்ளாட்சி அமைப்புகள் மிகப்பெரிய பங்களிப்பை வழங்க முடியும்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161